உ
சிவமயம்
புஷ்பவனநாதர் துணை

# பூவனூர்த்
# தலவரலாறு

ஏழாம் பதிப்பு
1962

எழுதியுதவியவர்:
ஸ்ரீமான் ப. இராமநாத பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர்,
மன்னார்குடி.

பூவனூர்
ஸ்ரீ சதுரங்கவல்லபநாத சுவாமி
தேவஸ்தான வெளியீடு.

விலை 25 ந. பை.

198
3.63.
COLLECTOR
21 JAN 1963
THANJAVUR
C
MADRAS
Q23:38.2119
N49-7
112892

உ

சிவமயம்

புஷ்பவனநாதர் துணை,

தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூகா

# புஷ்பவன க்ஷேத்திரம்

என வழங்கும்

# பூவனூர்த் தலவரலாறு

MADRAS RECORD OFFICE
MADRAS

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பூவ னூர்ப்புனி தன்றிரு நாமந்தான்
நாவி னூறுநூ றாயிர நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே

திருச்சிற்றம்பலம்

——*——

TAMIL NADU ARCHIVES LIBRARY
MADRAS
112892

| | |
|---|---|
| முதற் பதிப்பு: | 1949 |
| இரண்டாம் பதிப்பு: | 1950 |
| மூன்றாம் பதிப்பு: | 1954 |
| நான்காம் பதிப்பு: | 1959 |
| ஐந்தாம் பதிப்பு: | 1960 |
| ஆறாவது பதிப்பு: | 1961 |
| ஏழாவது பதிப்பு: | 1962 |

O.2B:38.2H93.P
N49-7

உ

சிவமயம்

# முன்னுரை

**சிவதலம்பரவு திருமிகவுடைய பெரியோர்களே!**

இஞ்ஞாலத்தில் விளங்குவன ஆயிரத்தெட்டு சிவதலங்கள். அவற்றுள் இருநூற்றெழுபத்து நான்கு சமயாச்சாரியர்களால் பாடல் பெற்றன. அவற்றுள்ளும் சோழவள நாட்டை அலங்கரிக்கும் நூற்றுதொண்ணூறு தலங்களுள் காவிரியாற்றின் தென் கரையை தவழ்ந் தோங்கும் நூற்றிருபத்தேழு தலங்களில் ஒன்ருக மிளிர் வது இப்பூவனூர். போற்றுவாரற்று மறையாது இறை வன் திருவருளால் இத்தல புராணம் செல்வமாய் நிலேத் துள்ளது.

சைவநெறி தழைக்க தல புராணங்கள் வெளியிடும் அரிய பணியை பெரிதும் கவனித்துவரும் அறநிலேத் துறை ஆணேயர் உயர்திரு. **M. S. சாரங்கபாணி முதலியார்** B. A., B. L., அவர்களுக்கும் தஞ்சை துணே ஆணேயர் உயர்திரு. **S. சோமசுந்தர தேசிகர்,** M. A. அவர்களுக்கும், உதவி ஆணேயர் உயர்திரு. **K. ராஜா,** B. A., B. L., அவர்களுக்கும் சைவஉலகம் பெரிதும் கடப்பாடுடையது.

இத்தலம் தொண்டை மண்டல முதலியார் குலத் துதித்த இத்தலவாசியும், சிவத்தொண்டு தலேவருமா கிய **இராஜு முதலியார்** அவர்களால் முன்னர் கோயிற் றிருப்பணியும், குடமுழுக்கு விழாவும் நிகழ்விக்கப்பெற் றன. அன்னர் உடன் பிறந்தார் பஞ்சநத முதலியாரவர் களது அரும் பெறற் புதல்வர் திருவாளர் **ப. சுப்பையா**

முதலியாரவர்கள் ஆலய அறக்குழு தலைவராக தம் முன்னோரன்ன சிவாலய சிவபூஜை நியமங்கள் தவறாது கவனித்து சிவதரிசனமும் செய்துவரும் மேன்மையாளர்.

இத்தல வரலாற்றின் ஏழாவது பதிப்பு இப்பொழுது (1962) வெளி வருகின்றது. முதற் பதிப்பு வெளிவந்த ஆண்டு 1949. இப்பதிப்பில் இன்றியமையாத சில திருத்தங்கள் அமைந்துள்ளன.

இவ்வெளியீட்டில் காணும் பிழைகளைப் பொருட் படுத்தாது சிவ சரிதத்தையே பொருளாகப் போற்றுவர் அன்பர்கள் என்பது துணிபு.

M. நடேசன், B. A.,
*இறைபணியாளர்.*



உ

# திருப்பூவனூர்
## திருநாவுக்கரசு நாயனூர் தேவாரம்
### திருக்குறுந்தொகை
திருச்சிற்றம்பலம்

பூவ னூர்ப்புனி தன்றிரு நாமந்தான்
நாவினூறு நூ ருயிர நண்ணினூர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. 1

என்ன னென்மனே யெந்தையெ னுருயிர்
தன்னன் றன்னடி யேன்றன மாகிய
பொன்னன் பூவனூர் மேவிய புண்ணியன்
இன்ன னென்றறி வொண்ணு னியற்கையே. 2

குற்றங் கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றுந் தீவினே செய்தன மாய்க்கலாம்
புற்ற ராவினன் பூவனூ ரீசன்பேர்
கற்று வாழ்த்துங் கழிவதன் முன்னமே. 3

ஆவின் மேவிய வைந்தமர்ந் தாடுவான்
தூவெண் நீறு துதைந்தசெம் மேனியான்
மேவ னூல்விரி வெண்ணியின் றென்கரைப்
பூவ னூர்புகு வார்வினே போகுமே. 4

புல்ல மூர்த்தியூர் பூவனூர் பூம்புனல்
நல்ல மூர்த்தி நல்லூர் நனி பள்ளியூர்
தில்லே யூர்திரு வாரூர்சீர் காழிநல்
வல்ல மூரென வல்வினே மாயுமே. 5

அனுச யப்பட் டதுவிது வென்னுதே
கனிம னத்தொடு கண்களு நீர்மல்கிப்
புனித னேப்பூவ னூரனேப் போற்றுவார்
மனித ரிற்றலே யான மனிதரே. 6

ஆதி நாத னமரர்க ளர்ச்சிதன்
வேத நாவன்வெற் பின்மடப் பாவையோர்
பாதி யானுன் பரந்த பெரும்படைப்
பூத நாதன்றென் பூவனூர் நாதனே. 7

பூவ னூர் தண் புறம்பயம் பூம்பொழில்
நாவ லூர்நள் ளாறொடு நன்னிலம்
கோவ லூர்குட வாயில் கொடுமுடி
மூவ லூருமுக் கண்ணனூர் காண்மினே. 8

ஏவ மேது மிலாவம ணேதலர்
பாவ காரிகள் சொல்லலைப் பட்டுநான்
தேவ தேவன் திருநெறி யாகிய
பூவ னூர்புகு தப்பெற்ற நாளின்றே. 9

நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே. 10

மைக்க டுத்த நிறத்தரக் கன்வரை
புக்கெ டுத்தலும் பூவனூ ரன்னடி
மிக்க டுத்த விரல்சிறி தூன்றலும்
பக்க டுத்தபின் பாடியுய்ந் தானன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்-திருஞானசம்பந்தர் புராணம்.

''பழுதில் சீர்த்திருப்பரிதி நன்னியமும் பணிந்தங்
கெழுது மாமறையாம்பதி கத்திசைபோற்றி
முழுதுமானவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவிலார் திருப்பூவனூர் வணங்கிவந் தணைந்து''

(பெரியபுராணம் 375)

## உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த திருப்பதிகக் கோவை-4 செய்யுள்.

பள்ளியின்முக் கூடறிரு விரும்பூளை யாவூர்ப்
பசுபதீச் சரம்பாலைத் துறைபரிதி நியமங்
கள்ளில்குரங் கணின் முட்டந் திருமுருகன் பூண்டி
கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர்
புள்ளமங்கை நாட்டியத் தான் குடிகலைய நல்லூர்
புக்கொளியூ ரவிநாசி **பூவனூர்** துறையூர்
கொள்ளிக்கா டிடைச்சுரமச் சிறுபாக்கம் விளமர்
கொட்டையூர் கொடுங்குன்றங் கூடலையாற்றூரே.

## திருப்பதிக் கோவை-8 செய்யுள்.

மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர்
மிளிர்தலையா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலுதிரும் பூளைதிரு வரதைப்பெரும் பாழி
மாலூரு மவளிவண நல்லூர்பரிதி நியமம்
வாழ்வெண்ணி **பூவனூர்** பாதாளீச் சுரநீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந்
திருவிடும்பா வனத்தோடு சேர்ந்த கடிக்குளமே.

## உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த சிவக்ஷேத்ர சிவநாமக் கலிவெண்பா.

— போதமிகு

"பூவனூர் கற்பகத்தைப் புல்லுகின்ற புட்பவனத்
தேவனே தேவ சிகாமணியே"

திருச்சிற்றம்பலம்.


௬

## தலம் தீர்த்தம் முதலியன.

பூவனூர் என்னும் இச்சிவதலம் சோழநாட்டுத் தலங்களில் காவிரிக்குத் தென்பால் உள்ளது. சோழ நாட்டுத்தலங்கள் 190 அவற்றுள், காவிரிக்குத் தென்பால் உள்ள சிவதலங்கள் 127. பூவனூராகிய இத்தலத்தின் வடபால் திருவிரும்பூளை என்னும் ஆலங்குடி, தென்பால் செண்பகாரணியம் என்னும் இராச மன்னார்குடி, தென்கிழக்கில் பாமணி-பாம்பணி என வழங்கும் திருப்பாதாளேச்சுரம், வடமேற்கில் கோவில் வெண்ணி என்னும் தலங்கள் உள. இராச மன்னார்குடி வைணவத்தலம். மற்றவை தேவாரம் பெற்ற சிவதலங்கள். பூவனூர் என்பது புஷ்பவனம் என வடமொழியில் வழங்கப்படும். இது பாமணி என்னும் பாம்பணியாற்றின் மேல்கரையில் ஆற்றுக்கு அணித்தாகவுள்ளது. வடக்கே சிறிது தூரத்தில் விண்ணார் என்னும் வெண்ணியாறு ஓடுகின்றது. வெண்ணியாறு வெண்ணாறென மருவி வழங்குகிறது. இதன் உண்மையான சொரூபம் வெண்ணியார் என்பதே. இதனை இத்தலத் தேவாரப் பதிகத்தின் நான்காவது திருப்பாடலில் "வெண்ணியின் தென்கரைப் பூவனூர்" என அருளிச்செய்யப் பெற்றமையும் காண்க.

## தலச்சிறப்பு.

இத்தலம் வழிபாடு செய்வோருடைய பாவங்களை யெல்லாம் போக்குவது, அவரவர் கருத்துக்களையும் நிறைவேற்றுவது, இம்மையில் எவ்வகைச் செல்வங்களையும் கொடுப்பது, சிவஞானச் செல்வத்தையும் மெல்ல மெல்ல உண்டுபண்ணுவதாம். இயமவாதனை என்பது இத்தலத்திலே இல்லை என்பர். நந்திதேவர் முதலியோர், சிவகணங்கள் இத்தலத்திலே வழிபட்ட சிவலிங்கங்களும் உள. கற்பகவல்லி, இராசஇராசேசுவரி என்னும் இரண்டு அம்பிகைகள் இத்தலத்திலே கோயில் கொண்டுள்ளனர். சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்பிகைகளின் சந்நிதி இரண்டும் தெற்கு நோக்கியும் இருக்கின்றன, ஸ்ரீ சாமுண்



திருக்கோயில் முன்புறம்

டீசுவரி சந்நிதி சுவாமி சந்நிதிக்கு எதிரில் வடக்கு முகமாக அமைந்து தனிக்கோயிலாக விளங்குகிறது. இந்தச் சாமுண்டீசுவரி சந்நிதியிலேதான் எலிகடிக்கு வேர் கட்டப்பட்டுப் பிரார்த்தனை செலுத்தப்படுகிறது. சங்காதோஷம் முதலிய எல்லா தோஷங்களும் நிவர்த்தியாவது கண்கூடாக இன்றும் உள்ளமை காணலாம். சாமுண்டீசுவரி தற்காலத்திலே பிரத்தியட்ச தெய்வமாக விளங்கிக் காரியசித்திகளை யெல்லாம் நிறைவேற்றுவதை இத்தலத்திலே கண்டு எளிதில் தரிசித்துய்யலாம்.

வடதிசையில் இத்தலத்திலுள்ள புன்னைமரச் சோலையில் சடாயுவின் வேண்டுகோளின்படி ஸ்ரீ இராமபிரான், சீதை. இலக்குமணன் முதலியோருடன் எழுந்தருளிக் காட்சிதரும் கோயில் ஒன்றுள்ளது. சிவாலய விஷ்ணு ஆலயங்கள் சேர்ந்து விளங்கும் தலம் பாஸ்கரக்ஷேத்திரம் என்று கூறப்படும் இது மிகச் சிறந்த தலம்.



சிவமயம்

# புஷ்பவன க்ஷேத்திரம் என வழங்கும் பூவனூர்த்தல வரலாறு.

## பூவனூர் கிராமம்

ஜில்லா : தஞ்சாவூர்.

தாலூகா : மன்னார்குடி.

புகைவண்டி நிலையம் : நீடாமங்கலம்—மன்னார்குடிப் பிரிவில் இராசப்பையன்சாவடி; இந்த நிலையத்துக்கு வட மேற்கில் இவ்வூர் ஒரு மைல் தொலைவில் உள்ளது.

சாலை வசதிகள் : நீடாமங்கலம் — மன்னார்குடி கற்சாலையில் பூவனூர் உள்ளது. நீடாமங்கலத்திலிருந்து 2 மைல், மன்னார்குடியிலிருந்து 6 மைல். பஸ் போக்குவரவு வசதியுண்டு.

நதிகள் : கற்சாலையின் ஓரமாகத் தெற்கு வடக்கில் பாம் பணியாறு என்னும் க்ஷீரநதி ஓடுகிறது. இதன் கரையில் மேற்பால் 2 பர்லாங் தூரத்தில் கோயிலும் கிராமமும் இருக்கின்றன.

குளங்கள்: 1 க்ஷீரபுஷ்கரணி 2 கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தம் 3 தர்ம புஷ்கரணி 4 நம்பி புஷ்கரணி என்பன. 1, 2 குளங்கள் ஸ்ரீ புஷ்பவனேசுரர் கோயிலுக்கு எதிரிலும், தென்மேற்கிலும் முறையே இருக்கின்றன. 3, 4 குளங்கள் ஸ்ரீ இராமர் கோயிலுக்குத் தென்மேற்கிலும் கிழக்கிலும் முறையே உள்ளன.

கிராம ஜனத்தொகை : 1864.

சில குறிப்புகள் : சிறு கிராமமாயினும் இவ்வூர் இரண்டு பகுதிகளையுடையது. கீழ்ப் பகுதியிலேதான் கோயிலும், நான்கு

வீதிகளும்; மேலப்பகுதியிலே ஸ்ரீ இராமர் கோயிலும், அக்கிர காரமும் உள்ளன. கற்சாலையிலிருந்து பாம்பணியாற்றைக் கடந்து மக்கள் செல்லுமாறு ஒரு பாலம் உண்டு. தெற்கே இராய புரத்துக்குப் போகும் பாலத்திலிருந்து தனியாக வண்டிச் சாலை யும் உண்டு.

**சிவாலய அமைப்பு முதலியன :** கோயில் அழகிய கோபுரத் துடனும் இரண்டு பிரகாரங்களுடனும் விளங்குகிறது. கீழ்மேல் 304 அடி, தென்வடல் 147 அடிகள்.

## மூர்த்திகள்.

**சுவாமி திருநாமம் :** ஸ்ரீ புஷ்பவனநாதர்; சதுரங்க வல்லப நாதர் என்ற திருநாமமும் உண்டு.

**அம்பிகை :** ஸ்ரீகற்பகவல்லி, ஸ்ரீ இராஜராஜேசுவரி.

**பரிவார மூர்த்திகள் :** கணபதி, ஸ்ரீ தட்சணாமூர்த்தி, ஸ்ரீ சிவகாமசுந்தரிசமேத ஸ்ரீ நடராச மூர்த்தி, ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தி (வள்ளி, தெய்வயானை சமேதராக) இலக்குமி நாரா யணர், அண்ணாமலைநாதர், பசுபதீசுவரர், விசேடலிங்கம். சண்டேசுவரர், நவக்கிரகங்கள், சூரியன், பைரவமூர்த்தி முதலி யன. முன்மண்டபத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தி எழுந்தருளியுள்ளது, ஏனைய மூர்த்திகள் உட்பிரகாரத்தில் உள்ளன.

**உற்சவமூர்த்திகள் :** விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், பாலசுப்பிரமணியர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பிரதோஷநாயகர், பிட்சாடனர், சண்டேசுவரர் முதலியன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர், சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார் விக்கிர கங்களும் உள்ளன. சுக்கிரவார அம்மன், ஸ்ரீ சாமுண்டீசுவரி உற்சவ மூர்த்திகளும் உள. அஸ்திர தேவரும் உண்டு.

## தீர்த்தங்கள்.

1 பாம்பணி நதி, 2 க்ஷீரபுஷ்கரணி; இது சந்நிதிக்கு எதிரில் உள்ளது; 3 கிருஷ்ண குஷ்டஹரதீர்த்தம் (கருங்குட்ட நிவர்த்தி) இது தென்மேற்கு மூலையில் உள்ளது, இத்தீர்த்தம் கருங்குழி என வழங்கும்.

## தீர்த்த விசேடம்.


கருங்குழி என்னும் கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தத்திலே வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், மாசிமகம் இந்தக் காலங்களில் சுவாமி தீர்த்தங்கொடுத்தருளுவர். ஸ்ரீ நடராசர் சந்நிதிக் குளத்திலே வைகாசி விசாக தீர்த்தம் கொடுப்பர். தைப் பூசத்திலே பாம்பணி நதியில் தீர்த்தம் உண்டு.

## நித்திய நைமித்திக பூசைகள்.

நாடோறும் திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம் சாயங் காலம், இரண்டாங்காலம்,அர்த்தயாமம் ஆகிய 6 கால பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமையில் சுக்கிரவார அம்மனும், பிரதோஷ காலங்களில் பிரதோஷ நாயகரும், கார்த்திகையில் ஸ்ரீ பாலசுப்பிரமணியரும் பிரகாரத்திலே எழுந்தருளப் பண்ணப் படுகின்றன. வைகாசி மாதத்திலே பிரமோற்சவம் பத்து நாட் களிலும் பஞ்சமூர்த்திகளும் வீதிக்கு இரண்டு வேளைகளிலும் எழுந்தருளுவர். ஸ்கந்தசஷ்டி உற்சவமும் திருக்கல்யாண உற்சவ மும் விசேடமாக நடைபெறுகின்றன.

## ஸ்ரீசாமுண்டீசுவரி.

ஸ்ரீ சாமுண்டீசுவரிக்கு இங்கே தனிக்கோயில். சுவாமி சந்நிதியில் துவசத் தம்பத்துக்குத் தெற்கிலே வடக்கு நோக்கிய சந்நிதியாக உள்ளது. சித்திரை மாதத்திலே பத்து நாட்கள் விழா நடைபெறும்.இந்த மூர்த்திக்குக் கன்னிப் பொங்கலன்று கன்னிக் குப்பரை என்னும் விழா சிறப்பாக நடைபெறுகிறது.



ஸ்ரீ சாமுண்டீசுவரி சந்நிதி

## கிராம தேவதைகள்

மகாசாத்தன் என்னும் ஐயனர் கோவில் தென்கிழக்குத் திசையிலும், வீரன், காத்தவராயன் என்னும் இரண்டும் வடக்கு வீதியிலும் உள்ளன. ஸ்ரீ புஷ்பவனேசுவரருக்கு பிரமோற்சவம் தொடங்குவதன் முன்பு கிராம தேவதைகளுக்குக் காப்புக்கட்டி ஒரு நாள் விழா நடைபெற்று வருகிறது. கிராம தேவதைகள் இந்தத் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவையாகலின் பூசை முதலிய செலவுகள் தேவஸ்தானத்திலிருந்தே செய்யப்படுகின்றன.

இவைகளைத் தவிர இந்தக் கிராமத்திலே ஸ்ரீ கைலாசநாதர், அங்காளம்மை, காளியம்மை, ஆஞ்சநேயர் முதலிய மூர்த்திகளுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன.

அமாவாசை, பௌர்ணமி, சூரிய சந்திர கிரகணங்கள் அர்த்தோதய மகோதய புண்ணிய காலங்கள், ஞாயிற்றுக்கிழமை வெள்ளிக்கிழமைகளில் கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தத்திலே நீராடுபவர்கள் மிக்க நன்மை பெறுகின்றார்கள். இங்கே செய்யப்படும் நற்கருமங்கள் பல மடங்கு பயனைத்தருவன.

**தலவிருட்சம்** : பலா.

**மரவாகனங்கள்** : இடபவாகனங்கள் 3, பூதவாகனம் 2, நந்திவாகனம் 1, யானை 1, மயில் வாகனம் 2, கைலாச வாகனம் 1, ஆட்டுக்கிடா 1, பெருச்சாளி 1, குதிரை 1, பத்மாசுரன் 1, சிங்க வாகனம் 1, அன்னம் 1, பிரபாவளி 1 உள்ளன. இரதப் பட்டரைகள் 5 உள்ளன.

112892

**வெள்ளிக்கவசம்** : மூலஸ்தான மூர்த்திகளுக்கும், உற்சவ பஞ்சமூர்த்திகளுக்கும் வெள்ளிக் கசவம் உண்டு.

### தல மகிமை.

ரைவதமனுவின் கால இறுதியில் கடலால் உலகம் பெரிதும் அழிந்து பிறகு சாக்ஷுஷமனுவின் காலத்தில் தேசமெல்லாம்

Q 263;38, 21193.P
N49-7

செழித்து உலகம் முன்போலாயிற்று. அப்போது சிவபெருமான் திருவிளையாடலாக உமாதேவியோடு இருடபாருடராய்ப் பதினெண் கணங்களுஞ் சூழ எழுந்தருளினர். இந்தப் பூவனூரு க்கு ஆகாய வழியே வந்தபோது இதுவரை எங்கும் இல்லாத சிறந்த வாசனை வீசியது. உடனே வாசனை வரும் இடத்தை நோக்கி வந்து இந்த புஷ்பங்கள் நிறைந்த பூவனூரில் தாம் பார்வதியுடன் பரம திருப்தியடைந்தவராய்த் தங்கினர். இதனைக் கண்ட சிவபூசையில் பரமபக்தியுடைய கணங்கள் ''உமக்குப் பிரியமான இந்த மலர்களால் உம்மைப் பூசிக்க விரும்புகிறோம்" என்று விண்ணப்பித்தார்கள். சிவபெருமானும் சம்மதித்து நமது லிங்க வடிவை வைத்துப் பூசியுங்கள். அதுவரை நாம் உமக்கு முன்னே எழுந்தருளியிருப்போம் என்று ஆகாயத்திலே நின்றருளி னர்.

உடனே பூமியைச் சமப்படுத்திக் கடம்ப மரங்கள் அடர்ந்த இடத்தில் சிவலிங்கத்தைத் தாபித்து அபிஷேகம், ஆரா தனை செய்து பலவாறு தோத்தரித்தார்கள். அவ்வாறே அம்பிகையையும் பூசித்தார்கள். இந்த உத்தமமான தலத்தை விட்டுப் பிரிய மனமில்லாமலும், ஆகாயத்திலுள்ள சிவபெரு மானை விட்டுப் பிரியமுடியாத பக்தியுடையவர்களாய்ப் பலவாறு தோத்தரித்தார்கள். இவைகளால் அதிக திருப்தி யடைந்த சிவ பெருமான் ''நீங்கள் இப்போது பூசித்த லிங்கம் எல்லாத் தலத்தி லுள்ள சிவலிங்கங்களை விட மிகமிகச் சிறந்தது. நமக்குப் புஷ்பங் கள் பிரியமானதுபோல் இது நமது குமாரனாகிய முருகனுக்கும் உகந்த கடம்பவனம் ஆயிற்று. மேலும் நமது உமாதேவிக்குப் பிரியமான பல புஷ்பங்களும் நிறைய இருப்பதால் இது மிக விசேடமான தலமாயிற்று. வேறுவேறு தலங்களில் நம்மையடை வதற்கும், அருளைப் பெறுவதற்கும் பிரம, விஷ்ணு ஆகியோர் சிவலிங்கங்களை வைத்துப் பூசித்தார்கள். நாமே விரும்பி நேரே இருந்து நிறுவிய சிவலிங்கமானதால் இது மிகமிகச் சிறந்த தாகும்'' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இந்தத் தலத்தை நினைப்போர், தரிசிப்போர், பெறும் பலனைக் கூறிமுடியாது.

## தீர்த்த மகிமை.


**கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தம் :** கிருத யுகத்திலே சோழ நாட்டில் சித்திரபுரி என்னும் பட்டணத்தில் தருமவர்மன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் சிறந்த சிவபக்தன், நல்ல நீதிமான். முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனுய் அவனுக்குக் கருங்குஷ்ட நோய் பீடித்தது. எல்லா விதமான வைத்தியத்தாலும் தான தருமங்களாலும் விலகாது அந்நோய் முற்றி வரலாயிற்று. சிவ பெருமானருளால் ஒருகால் இரேணுகர் என்னும் முனிவர் அரச சபைக்கு வர நேர்ந்தது. முறைப்படி அவரை வணங்கித் தனது குறையை நிவர்த்தி செய்ய ஏதாவது ஒரு வழி சொல்லியருள வேணுமென்று பிரார்த்தித்தான் அரசன்.

அவர் இத்தகைய சிவபக்தனுக்கு இந்த நோய்வரக் காரணமென்ன வென்று தாம் ஞானப்பார்வையால் உணர்ந்து முற்பிறப்பின் செயலைக் கூறுவாராயினர்: "அரசே! நீ மூன்ரும் பிறவியில் கௌட தேச அரசனுயும், சிறந்த தர்மகர்த்தாவாகவு மிருந்தாய். அப்போது நல்ல வேதவித்தும், சிவபக்தியுமுடைய பிராமணர் ஒருவர் வறுமை நோயாலும், குட்ட நோயாலும் பீடிக்கப்பட்டவராய் உன்னையடைந்து யாசித்தார். அவருக்கு உடலில் இருந்த குட்ட நோய்ப் புண்ணிலிருந்து கெட்ட நாற்றம் வீசியது. நீ கோபத்தையடைந்தாய்; இத்தகைய கொடிய நோயுடைய நீர் இராஜசபைக்கு வரலாமா என்று கேட்டாய். அவர் தன் வறுமையினுல் வந்ததைப் பணிவுடன் கூறினுர். அவரை பலவாறு நிந்தித்து நீ இராஜசபையை விட்டுத் துரத்தினுய்.

அப்படி ஒரு சாமானிய மனிதனும் செய்யமாட்டான். பிச்சைக் கேட்போருக்கு இல்லை என்பதே பாவம், அதிலும் ஒரு தவசி, தாங்கமுடியாத வறுமை, குட்டமாகிய ஒரு பெரிய நோயால் வருந்துகிறவனுக்கு உதவி செய்யவில்லை யென்ருல் பெரிய பாவம். ஓர் அரசனுகவிருந்தும் தீவினைப் பயனை யனுப விக்கிறவனுக்கு ஆதரவு செய்யாமல் சபையில் அவமானம் செய் தனுப்பிய பாவம் மிககொடியது. அதனுல் உனக்கு அந்த நோய்

பீடித்தது. இது சாமானியமாய்த் தீராது.மூர்த்தி, தலம், தீர்த்தம் எல்லாவற்ருலும் சிறந்த ஒரு சிவதலத்தை யடைந்தாலல்லாது தீராது" என்ருர். அரசன் மறுபடியும் நீரே அந்தத் தலத்தையும் சொல்லி யருள வேணுமென்று பிரார்த்தித்தான். முனிவர், சோழ நாட்டிலுள்ள பூவனூர் என்னும் தலத்தைத் தியானித்தாலும் அடைந்தாலும் சர்வ வினைகளும் தீரும் என்றருளினுர். அரசன் அவரை மறுமுறையும் வணங்கி உடனே தலயாத்திரைக்குப் புறப்பட்டான். வழியில் உள்ள சிவதலங்களை யெல்லாம் தெரிசித்துக் கொண்டு சோழநாட்டிலுள்ள பாம்பணி நதியின் மேல் கரையிலுள்ள இப்பூவனூரை அடைந்தான். கோயிலின் தென்மேற்குத் திசையில் உள்ள தீர்த்தத்தில் நீராடி, சிவதெரிசனம் செய்து, மாகேசுர பூசை முதலியனவும் நடத்தி வந்தான். உடலிலுள்ள குஷ்டநோயின் அரிப்பு முதலிய துன்பங்களால் என்றும் நன்ருய் உறங்காத அரசன் தன்னையறியாமல் நன்ருக உறங்கினுன். இரண்டாம் நாளும் இத்தீர்த்தமாடினுன். உடற் புண் நோய் நீங்கியது. மூன்ரும் நாள் புண்காய்ந்து வருவதைக் கண்டான், பரமானந்தம் கொண்டான். நாடோறும் ஆறுகாலமும் இத்தீர்த்தத்திலாடிச் சிவதரிசனஞ் செய்தான். ஆரும் நாளில் குஷ்டமிருந்த சின்னமில்லாமல் மறைந்தது.

அதிகமான ஒளியுடனும் நற்கந்தத்துடனும் சரீரம் விளங்கியது. யாவரும் பரம ஆச்சரியமடைந்தனர். தீர்த்த மகிமையையும் தல மகிமையையும், சிவதரிசன பலனையும் கொண்டாடினுர்கள். கருங்குட்ட நிவர்த்தி செய்தமையால் கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தமெனப் பெயர் பெற்றது. உடனே அரசன் சிவாலயத்தைப் புதுப்பித்து மாசி மாதத்தில் பிரம்மோற்சவம் செய்து மக நக்ஷத்திரங்கூடிய பௌர்ணமியில் தீர்த்தவாரியும் நடத்திச் சிவ பெருமானை வழிபட்டான். புஷ்பவனநாதர் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டுத் தரிசனம் தந்தருளினுர். 'தாம் மற்றத்தலங்களைக் காட்டிலும் மிகவிரும்பிய இடமாதலால் இத்தலத்தை யடைந்தோர் யாவருக்கும் நிறைந்த அருளைச் செய்வோம். சர்வநோய்களும் பாவங்களும், வறுமைகளும் நீங்கும்; எல்லா நலங்களையும்



திருக்கோயிலும், க்ஷீரபுஷ்கரணியும்.

பெறுவர். நமது திருவடிகளையும் அருளுவோம்' என்று திருவாய் மலர்ந்தருளிச் சிவலிங்கத்தில் மறைந்தனர்.

## புஷ்பவன நாதர் சதுரங்கவல்லபநாதரான திருவிளையாடல்.

செந்தமிழ்வளர் பாண்டிய நாட்டிலுள்ள திருநெல்வேலி யில் வசுசேனன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி சாந்திமதி. கற்பிற் சிறந்தவள். இருவரும் சிறந்த சிவபக் தர்கள். தரும நெறியிலே தவருது ஒழுகுபவர். இவர்கட்கு எல் லாப்பேறும் கிடைத்தும் புத்திரப் பேறில்லை. ஒருநாள் சாந்திமதி யம்மை சிவபெருமானிடம் முறையிட்டாள். எப்படியாவது தனக் குப் புத்திரப் பேறருளவேணுமென்று கதறினுள். புத்திரப்பேறு யாவர்க்கும் எளிதில் கிடைப்பதன்று.இவர்களுக்கு அந்தநல்வினை இருந்தாலல்லாமல் கொடுப்பது விதியல்ல என்று உமையம்மை யிடம் சிவபிரான் கூறினர். கருணை வடிவமான பார்வதி தேவி யார் எப்படியும் அவள் மனமகிழும்படி அருள் செய்ய வேண்டு மென்று இறைவரைக் கேட்டுக் கொண்டாள். அப்படியானல் நீ புத்திரியாய் அவதாரம் செய். நாமே உம்மை வந்து மணம் செய தருளுவோம் என்றருளினர். உமக்குப் பணிவிடை செய்ய சப்த மாதர்களுள் சிறந்த சாமுண்டியிருக்கட்டும் என்றருளினர். ஒரு நாள் அரசனும், அரசியும் தாமிரபரணியில் நீராடும்போது பார்வதி தாமரைப் பூவின்மேல் .சங்குருவாகத் தோன்றினர். அதை அரசன் கையிலேந்திக் கரையேறினன். அது ஒரு அற்புத மான பெண் குழந்தையாகக் கண்டான். சிவனருளை மனத்திலே கொண்டான், அளவிலா ஆனந்தத்திலாழ்ந்தான், மனைவி கையிற் கொடுத்தான். அக்கற்புக்கரசியின் தனங்களில் பால் பெருகியது. உமையம்மையாகிய குழந்தைக்குக் கொடுத்தருளினள். அள விலாத சிறப்புக்களுடன் குழந்தையைச் சிவசந்நிதிக்கு எடுத்துச் சென்று பிறகு அரண்மனைக்கு கொண்டுபோய் இராஜராஜேசுவரி என்று பெயரிட்டார்கள்.

சாமுண்டியும் ஒரு செவிலித்தாயாக வந்து அம்பிகையை வளர்த்து வந்தாள். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை வளர்ந்தது. பரம மங்களவடிவுடன் எல்லாக் கலைகளையு முணர்ந்தது. பெண்களுக்குரிய விளையாடல் களில் சிறந்து விளங்கியது. சதுரங்க விளையாட்டில் யாவரையும் வென்று விளங்கியது. பத்து வயதாயிற்று. இப்பெண்ணுக்குத் தகுந்த நாயகனை எங்கே காண்பது என்ற கவலையில் பெற்றோர் மூழ்கினர். ஒரு அரசகுமாரனுவது தகுதியுடையவனாகக் கிடைக்க வில்லை. பிறகு சதுரங்கத்தில் எவன் ஜெயிக்கிருனோ அவனே நாயகனுவான் என்று விளம்பரப்படுத்தினார்கள், அப்போதும் ஒருவரும் ஜெயிக்கவில்லை. அரசன் மனக்கவலை யதிகரித்திருந் தான். அரசனிடம் ஒரு தவசி வந்தனர். சிவதலயாத்திரை செய் தால் உங்கள் எண்ணம் நிறைவேறுமென்று அவர் கூறினர். உடனே சிவபெருமானைத் தியானித்தவர்களாய், குடும்பத் துடனும், மந்திரி முதலியவர்களுடனும் வடக்கு நோக்கிச் சிவ தலங்களைத் தரிசித்துக்கொண்டு சோழநாட்டை யடைந்தார் கள்.

பல தலங்களையும் தரிசித்தனர். இந்த மகாதலத்தை யடைந்தார்கள். விசேஷமான சகுனங்கள் காணப்பட்டன அதனாலே தங்கள் எண்ணம் கைகூடுமென்று ஆனந்தமடைந்த னர். பாம்பணியாறு, க்ஷீர நதி, கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தங் களில் முறைப்படியே தீர்த்தமாடினர். சிவதெரிசனம் செய்தனர். சிவபெருமான் சித்தவேடத்தராய் எழுந்தருளினர். அரசனிடம் பல சாஸ்திரார்த்தங்களைப் பற்றிப் பேசிப் பிறகு தாம் சதுரங்க முதலியவற்றிலும் வல்லபரென்று கூறினர். சித்தமூர்த்தி ராஜ கன்னிகையான இராஜராஜேசுவரியுடன் சதுரங்கமாடினர். ஒரு நாளும் தோற்காத அம்பிகையை சித்தவேட மூர்த்தி தோற்கச் செய்தார். அரசன் தான் பெண்ணுக்கு வரன் தேடிவந்த விப ரத்தையும், சதுரங்கத்தில் வல்லவராய் வெல்பவருக்குப் பெண் கொடுப்பதாய்ச் செய்த விளம்பரத்தையும் சொல்லி நின்றான். சித்தமூர்த்தியின் பெயர், சாதி, குலம் முதலியவற்றைக்கேட்டான். அவரோ ஒரு நாமம், ஒருருவம், ஒரு குலம் முதலிய இல்லா

மையையும், தாயும் தந்தையமிலாத் தனியன் என்பதையும் கூறியருளினர்.

இவ்வுண்மை யறியாத அரசன் மயங்கினன். இராஜ ராஜேசுவரியோ இத்தன்மையானவர் பரமசிவனே என்றும், முன் விளம்பரப்படுத்தியபடி அவருக்கே மணம் முடிக்க வேணு மென்றும் கூறினள். அவரை மனத்தால் தான் வரித்து விட்ட படியால் அவருக்கே திருமணம் செய்விக்க வற்புறுத்தினள். அரசன் பயந்தான். வந்த மூர்த்தியை உண்மையுரைக்க வேணு மென்று பணிந்தான். சிவபெருமான் காட்சிகொடுத்தார். முன் வரலாற்றைக் கூறினர். திருமணம் நடத்த உத்தர விட்டார். அரசன் பரவசப்பட்டவனாய் சர்வதேச ராஜாக்களுக்கும் திருமண ஓலை போக்கி எல்லாச் சிறப்புகளுடனே இராஜராஜேசுவரியைப் புஷ்பவன நாதருக்குத் திருமணம் செய்வித்துக் களித்தான். அம்பிகையைச் சதுரங்கத்தால் வென்றமையால் **சதுரங்கவல்லப நாதர்** என்னும் காரணப் பெயரும் இறைவனுக்கு உண்டா யிற்று.

அத்தகைய திருமணக்கோல மூர்த்தியைப் பாண்டி மன்னனும், சாந்திமதியும் கண்டு நமஸ்கரித்து இந்தத் திருக் கல்யாண மகோற்சவத்தை வருடந்தோறும் சர்வ பக்தர்களும் கண்டுகளிக்குமாறு நடத்தவும் இராஜராஜேசுவரியும் சாமுண்டி யும் தனித்தனி சந்நிதிகளிலே விளங்கவும், இத்தலத்தை யடைந்த மாத்திரத்திலே சர்வ மங்களமும் யாவர்க்கும் உண் டாகும்படியும் வரங்களைக் கேட்டனர். சிவபெருமான் அப்படியே அருள் செய்தார்.



**திருவாபரணங்கள் :** சுமார் மதிப்பு ரூ. 20,000 உள்ளன.

நன்செய், புன்செய் நிலங்கள். நன்செய் 174 ஏக். 21 செ., புன்செய் 37 ஏக். 92 செண்டு உள்ளன. சுமார் வருமானம் 32 ஆயிரம் ரூபாய்.

## கோயில் நிர்வாகம்.

1956 ஜூலை 30 வ முதல் O. A. No. 76/56 Date 30-7-56 தஞ்சை டெபுடி கமிஷனர் அவர்கள் உத்தரவின்படி அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் நிர்வாகத்தில் இருந்துவருகிறது.

## முற்கால நிர்வாகம்

திரு. P. சுப்பையா முதலியார், தலைவர்.

திரு. P. R. சுப்பையா பிள்ளை
திரு. K. சோமசுந்தர முதலியார்
திரு. T. B. ஐயாத்துரை உடையார்
திரு. R. N. சிதம்பர முதலியார்
} தருமகர்த்தர்கள்

திரு. N. இராஜமாணிக்கம், நிர்வாக அதிகாரி.


திரு. R. N. சிதம்பர முதலியார், மானேஜிங் டிரஸ்டி
திரு. T. B. ஐயாத்துரை உடையார், தருமகர்த்தர்
திரு. S. பஞ்சநத முதலியார், தருமகர்த்தர்
திரு. V. நாராயணன், B. A., நிர்வாக அதிகாரி

## தற்காலம்

திரு. P. சுப்பையா முதலியார், அறக்குழுத்தலைவர்.
திரு. T. B. ஐயாத்துரை உடையார், அறங்காவலர்.
திரு. K. வெங்கிடாசல முதலியார், அறங்காவலர்.
திரு. M. நடேசன், B. A. இறைபணியாளர்.

## கோயில் ஊழியர்கள்.

குமாஸ்தா-1, கணக்குப் பிள்ளை-1, சிவாசாரியர்-2, பரிசாரகர்-3; அத்யயனபட்டர்-1, தேவாரம் ஓதுவார்-1



திருக்கோயிலின் மேல் தோற்றம்

அறை மணியம்-1, கிராம மணியம்-1, மேளம் செட்-1, திருவிளக்கு-1, சங்கு-1 ஆபீஸ் பியூன்-1, இராத்திரி காவல்-1; திருவலகிடுவோர்-2 துணிவெளுப்போன்-1, தோட்டி-1 முதலியோர் உள்ளனர்.

## விசேட தருமக் கட்டளை விபரங்கள்.

1 நாகப்பட்டினம் தாலுக்கா, குருக்கத்தி கிராமம் திரு. துரைசாமி முதலியார் பாரியை குப்பண்ணி அவா களின் உயிலின்படி யஜுர்வேத பாடசாலை நடந்துவர ஏற்பாடாகி இருக்கிறது.

2 காரைக்குடி திரு.பழை. மெ.மெ. பழனியப்ப செட்டியார் அவர்கள் டிரஸ்டுபத்திரப்படி "பசுமடம், நந்தவனம், அர்த்தசாமக் கட்டளை" முதலியவை நடந்துவர ஏற்பாடாகி இருக்கின்றன.

3 திரு. இராஜுமுதலியார் பாரியை கமலத்தண்ணி அவர்களின் உயில்படி பிரதி சுக்கிரவாரமும் **அம்பாள்** புறப்பாடு நடக்க ஏற்பாடாகி இருக்கிறது.

4 திரு. சபாபதி முதலியார் அவர்கள் உயில் மூலம் கிருத்திகை தோறும் புறப்பாடு நடக்க ஏற்பாடாகி இருக்கிறது.

இத்தல சம்பந்தமாகத் **திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம்-திருக்குறுந்தொகைப் பதிகம்-1, தலபுராணம்-1** தலவரலாறு வசனம்; பூவனூர்ச் சிலேடை வெண்பா; இது திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து வித்வான் **ஸ்ரீமத் சுப்பிரமணியத்தம்பிரான்** என்பவரால் இயற்றப் பெற்றது. ஸ்ரீ. இராசு முதலியாரவர்களால் (ஏவிளம்பி) 64 ஆண்டுகளின் முன்பு அச்சிடப்பட்டது இப்போது கிடைத்தற்கு அரிதாயுள்ளது.

## வார வழிபாடு முதலியன.

வெள்ளிக்கிழமை தோறும் வார வழிபாடு நடத்தப் பெற்று வருகிறது மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஒலிபெருக்கியின் மூலம் பாடப்பட்டு வருகிறது. நாடோறும் தேவார இன்னிசையும் ஒலிபெருக்கி வைத்தே பாராயணம் செய்யப் படுகிறது.

## சமயப்பிரசாரம்.

உற்சவகாலங்களில் தக்க பெரியோர்களால் சமய போதனை, விரிவுரைகளும், விசேட தேவார பாராயணமும் நடத்தப் பெறுகிறது.

## நூல் நிலையம்.

சிறப்பாக அமைக்கப்பட்டுப் பலரும் படித்துப் பயன் பெறும் நிலையில் உள்ளது. சுமார் 300 புத்தகங்களுக்கு மேல் இப்பொழுது உள்ளன.

## பத்திரிகைகள்.

திருக்கோயில், கலைமகள், தருமசக்கரம், தஞ்சை செய்திக் கதிர், சித்தாந்தம், தமிழ்ப்பொழில், யோசனு (இங்கிலீஷ்) முதலியன வாங்கப்பட்டு பயன்படுகின்றன. இந்து (Hindu) ஆங்கிலப் பத்திரிகை நாடோறும் வாங்கப்படுகிறது.

## மதிய உணவு.

ஆண்டுகள் தோறும் சுமார் 240 ரூபாய் அளவில் பள்ளிக்கூடத்து ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு பிரசாதமாகத் திருக்கோயிலிலிருந்து அளிக்கப் பட்டு வருகிறது.

நாடோறும் அபிஷேகமாகும் பசும்பாலை பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கே கொடுக்கப்பட்டு வருவது, குறிப்பிடத்தக்கதாம்.

## இலட்சார்ச்சனை.

1369-பசலி தைமீ முதல் ஸ்ரீ சாமுண்டீசுவரிக்கு இலட்சார்ச்சனை தொடங்கித் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. இந்தக் கைங்கரியம் திருவாளர் சுப்பையா முதலியாரவர்கள் குமாரர் திரு. பஞ்சநத முதலியாரவர்களால் சிறப்பாகத் தொடங்கப் பெற்று நல்ல முறையில் நடந்து வருகிறது.

## அர்ச்சனைச் சீட்டு விபரம்.

| | ரூ. ந. பை. |
|---|---|
| அஷ்டோத்திரம் | 0—15 |
| சகஸ்ரநாமம் | 0—50 |
| சாமுண்டியம்மன் பிரார்த்தனை எலிக்கடிச் சீட்டு | 0—40 |
| முடிச் சீட்டு | 0—32 |
| அபிஷேகச் சீட்டு (5 ரூபாய் திட்டத்திற்கு) | 0—50 |
| திருமணச் சீட்டு | 5—00 |

## நன்றியுரை.

இத்தல வரலாற்றைத் திருத்தமான முறையிலே முன்புள்ள க்ஷேத்திர வரலாற்றைப் பெரும்பாலும் தழுவித் திருத்தம் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டவுடனேயே அன்புடன் ஒப்புக் கொண்டு எழுதியும் நகலை சரிபார்த்தும் உதவிய திருவாவடுதுறை ஆதீன வித்வான், சித்தாந்த சைவமணி திருவாளர் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்,

M. நடேசன், B.A.,
இறைபணியாளர்.

O 23:38 . 21193 . P
N49-7
TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
112892

உ

# பூவனூர்

## ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்பாள்

## சன்னிதானத்தில்

பிரதி

ஞாயிறுக்கிழமையும்

காலை 8 மணிக்கு

# எலிகடிக்கு

## வேர் கட்டப்படும்.

லக்ஷ்மி பிரஸ், மன்னார்குடி.